# நவம்பர் – 26 – திங்கள்

## புனித ஜெனோவாகத்தலின்

**“இந்தஏழைக் கைம்பெண் எல்லாரையும் விடமிகுதியானகாணிக்கைபோட்டிருக்கிறாள்.’’ லூக். 21:3**

## முதல் வாசகம் : திருவெளிப்பாடு 14 : 1 – 5

யோவான் என்னும் நான் மேலும், சீயோன் மலைமீது ஆட்டுக்குட்டி நிற்கக் கண்டேன். அதன் பெயரையும், அதனுடைய தந்தையின் பெயரையும் தங்களது நெற்றியில் பொறித்திருந்த ஓர் இலட்சத்து நாற்பத்து நான்காயிரம்பேர் அதனுடன் இருந்தனர்.பின்பு விண்ணகத்திலிருந்து ஒரு குரலைக் கண்டேன். அது பெரும் வெள்ளத்தின் இரைச்சல்போலும் பேரிடி முழக்கம்போலும் யாழை மீட்டுவோர் எழுப்பும் இசைபோலும் ஒலித்தது. அந்த ஓர் இலட்சத்து நாற்பத்து நான்காயிரம் பேரும் அரியணை முன்னிலையில் நான்கு உயிர்களுக்கும், மூப்பர்களுக்கும் முன்பாகப் புதியதொரு பாடலைப் பாடிக்கொண்டிருந்தார்கள். மண்ணுலகிலிருந்து விலைகொடுத்து மீட்கப்பட்ட அவர்களைத் தவிர வேறு யாராலும் அந்தப் பாடலைக் கற்றுக்கொள்ள இயலவில்லை.அவர்கள் பெண்களோடு சேர்ந்து தங்களைக் கறைப்படுத்திக்கொள்ளாமல் கற்பைக் காத்துக்கொண்டவர்கள் ஆட்டுக்குட்டி சென்ற இடம் எங்கும் அதைப் பின்தொடர்ந்தவர்கள். கடவுளுக்கும், ஆட்டுக்குட்டிக்கும் உரிய முதற்கனியாக மனித குலத்திலிருந்து விலை கொடுத்து மீட்கப்பட்டவர்கள்.அவர்களது வாயினின்று பொய்யே வந்ததில்லை. ஏனெனில் அவர்கள் மாசற்றவர்கள்.

**பதில்பாடல் :** ஆண்டவரை நாடுவோரின் தலைமுறையினர் இவர்களே

## நற்செய்தி : லூக்கா 21 : 1 - 4

இயேசு நிமிர்ந்து பார்த்தபோது செல்வர்கள் தங்கள் காணிக்கைகளைக் காணிக்கைப் பெட்டிக்குள் போடுவதைக் கண்டார்.வறுமையில் வாடிய ஒரு கைம்பெண்ணும் இரண்டு காசுகளை அதில் போடுவதைக் கண்டார்.அவர் ”இந்த ஏழைக் கைம்பெண் எல்லாரையும்விட மிகுதியான காணிக்கை போட்டிருக்கிறார் என உண்மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன். ஏனெனில் அவர்கள் அனைவரும் தங்களுக்கு இருந்த மிகுதியான செல்வத்திலிருந்து காணிக்கை போட்டனர். இவரோ தமக்குப் பற்றாக்குறை இருந்தும் தம் பிழைப்புக்காக வைத்திருந்த எல்லாவற்றையுமே போட்டுவிட்டார்” என்றார்.

**தியானம்:** இறைவனுக்கு நாம் தரும் காணிக்கை நம்மையே கொடுப்பதன் அடையாளம் என்பது இன்றைய வாசகங்களில் வெளிப்படுகின்றது. நற்செய்தியில் யெருசலேம் கோவிலில் பலர் காணிக்கைகளை காணிக்கைப் பெட்டிக்குள் போடுவதைக் கண்டார். ஏழைக்கைம்பெண் ஒருவர் இரண்டு காசுகளைப் போட்டார். எல்லாரையும் விட அதிகம் போட்டது ஏழைக்கைம்பெண் என இயேசு கூறினார். தமது பிழைப்பிற்கு தேவையான அனைத்தையும் அவர் போட்டுவிட்டார். நாம் எவ்வளவு காணிக்கை செலுத்துகிறோம் என்பது முக்கியமல்ல மாறாக நாம் எத்தகைய மனத்துடன் காணிக்கை அளிக்கிறோம் என்பது தான் முக்கியமானது. ஏனென்றால் கடவுள் கேட்பது தூய்மையான உள்ளத்தையே. அவ்வாறான காணிக்கையை செலுத்த முடியும். அந்த நம்பிக்கையே உயர்வானது. இதுவே நம் கிறஸ்தவ வாழ்வின் மேன்மையானநிலை. இந்த நற்பண்பை எம்மிலே வளர்த்துக்கொள்ள ஒருவர் ஒருவருக்காக செபிப்போம்.